1995 ஏப்ரல் 26]

முறையை கொண்டுவருவதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. ஆகவே இந்த டிரை ப்ராசஸ் முறையைச் செயல்படுத்தும்போது நிச்சயமாக இந்த ஆலையிலிருந்து காற்று மூலம் வெளியேறுகிற மாசை அதிகமாக குறைத்து அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு கேடு ஏற்படாமல் அரசு பார்த்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 456, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

456—

கைத்தறி துணிகளின் தேக்கத்தைப் போக்க நடவடிக்கை

26503*—திரு. ஆ. சுப்புரத்தினம்:**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறித் துணிகளின் தேக்கத்தைப் போக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறைதோறும் துறைதோறும் புதுமைகளைப் புகுத்தி ஒரு பொற்கால ஆட்சியை நடத்தி வரும் நம்முடைய இதய தெய்வத்தினுடைய நல்லாட்சியில் கைத்தறித் துறையின் துணிகளுடைய தேக்கத்தை போக்கும் முகத்தான் அயல்நாடுளில் கண்காட்சிகள் துவக்கப்பட்டு அதன்மூலம் ஏற்றுமதிகளை விஸ்தரிக்கக் கூடிய சாத்தியக்கூறுகளை அரசு ஆராயுமா என அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்போது 1475 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அந்தந்த மாவட்ட சூழ்நிலைக்கு ஏற்ப பல்வேறு ரக கைத்தறி துணிகள் மற்றும் பட்டுத் துணிகளை உற்பத்தி செய்து தாய்ச்சங்கமாகிய தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக துணிகளை உடனுக்குடன் விற்பனை செய்து வருகிறோம். அதனால் இன்றைக்கு மிகப் பெரிய தேக்கம் கைத்தறித் துறையிலே இல்லை. இன்றைக்கு தேங்கியிருக்கின்ற துணிகள் 2 மாதத்தினுடைய உற்பத்தியினுடைய அளவே ஆகும். இதுவும் கோ-ஆப்டெக்ஸ் கொடுத்த உற்பத்தி திட்டத்திற்கு மேலாக கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்திருப்பது ஆகும். ஆகவே இந்தத் துணிகளை உடனடியாக விற்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே அந்நிய நாடுகளில் நடைபெறுகின்ற பொருட்காட்சியைப் பற்றி இங்கே உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அந்தப் பரிசீலனையையும் இந்தத் துறை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையோடு, உத்தரவோடு செயல்படுத்துவதற்கு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளுடைய மதிப்பு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, 210.43 இலட்சம் மீட்டர் துணிகள் மதிப்புதான் தேங்கியிருக்கிறது. இது 8 கோடியே 317 ஆயிரத்து 30 இலட்சமாகும். இது சுமார் 2½ மாதத்தில் மட்டுமே இந்த உற்பத்தி ஆகும். ஆகவே இதை உடனடியாக கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்வதற்கும் பொருட்காட்சிகள் போட்டு விற்பதற்கும் உரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 457, திரு. என்.ஆர். சிவபதி, மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

457—

தாத்தையங்கார்பேட்டையில் சாயத் தொழிற்சாலை அமைத்தல்.

*38165— **திரு. என். ஆர். சிவபதி:**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--